[4th December 1954

MR. SPEAKER :—" Is the hon. Member pressing his adjournment motion? "

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" I am not pressing it."

III.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER

MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER :—" I have to announce to the House that I have received the following message, dated the 1st December 1954 from the Governor of Madras :—

' In pursuance of Article 207, Clause (1) read with Article 199, Clause (1), sub-clause (*a*) of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras, hereby give my recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1954. ' "

IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—*cont.*

MR. SPEAKER :—" Now the hon. Member Sri S. Thinakarasami Thevar will continue his speech."

***SRI S. THINAKARASAMY THEVAR** :—" கனம் சபா நாயகர் அவர்களே, நேற்றையதினம் ஒரு சில நிமிஷங்கள் கவர்னர் பிரசங்கத்தை ஆதரித்துப் பேசியபோது, புதுச்சேரி பகுதிகள் விடுதலை பெற்ற விஷயமாகவும், அவ்விடுதலை இத்தேசத்தின் சரித்திரத்தில் ஒரு பிரசித்தி பெற்ற விஷயமென்றும், அடுத்தாற்போல் ஜில்லா போர்டுத் தேர்தல்கள் நல்ல முறையில் நடைபெற்றன என்றும், அதன் பின்னால் இன்றைக்கு உணவு நிலைமை முந்தைய வருஷத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகவும் சீர்கேடு அடைந்திருக்கிறது என்பது பற்றியும், அதன் காரணமாக கடன் ஒத்திவைப்பு நிவாரண சட்டத்தை விவசாயிகளுக்கு அனுகூலம் செய்யும் தோரணையில் நீடிக்கவேண்டுமென்றும், நீர்ப்பாசனத் திட்டங்கள் அமல் நடத்தப்படுவது பற்றியும் பேசினேன். இப்பொழுது தேசீய விஸ்தரிப்புத் திட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகின்றேன். இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டமானது உண்மையிலேயே இந்த தேசத்திலேயே ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஒரு விசேஷ விழிப்பை மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தத் திட்டம் ஆரம்பித்த காலந்தொட்டு நம் மக்களிடையே சொந்த முயற்சியாலே நாம் எல்லாக் காரியங்களையும் சாதிக்கமுடியும், எல்லாவற்றிற்கும் சர்க்காரை நாம் நம்பிக்கொண்டிருக்கவேண்டியதில்லை, நாம் எவ்வளவு முயற்சி செய்கிறோமோ அவ்வளவுக்கு நம் கிராமத்தின் நிலைமை உயரும் என்னும்படியான ஒரு புத்துணர்ச்சி கிராம மக்களிடையே ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணமாகத்தான் இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டம் பல இடங்களில் இன்றைக்கு வரவேற்கப்படுகின்றது. உதாரணமாக எங்கள் ஜில்லாவில் மதுரையை எடுத்துக்கொண்டால் விசேஷமான ஒத்துழைப்பைக் கொடுக்கிறார்கள். அதிலும் திருமங்கலம் தாலூக்காவிலுள்ள மக்களின் விசேஷ ஒத்துழைப்பின் காரணமாக பல அழகான திருப்பணித் திட்டங்களை நாங்கள் வகுத்திருக்கின்றோம். வடநாட்டிலிருந்து பல பெரியார்கள் அங்கு வந்து இந்தத் திட்டங்களைப் பார்த்து பாராட்டியிருக்கிறார்கள். ஆனபடியினாலே ஒரு திட்டம் நிறைவேறவேண்டுமானால் அங்குள்ள மக்களின் பூரண ஒத்துழைப்பு வேண்டும். இந்த தேசீய விஸ்தரிப்புத் திட்டத்திலே அவ்வாறு மக்கள் ஒத்துழைப்பைப் பெற சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள்? மக்கள் எந்த விதமான திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அதற்கு செலவழிக்கப்படும் தொகையில் பாதித் தொகையை சர்க்கார் அளிக்கிறது. மற்றப் பாதியை அப்பிரதேசத்து மக்கள் கொடுக்கவேண்டும். இம்முறைப்படி இந்தத் திட்டம் நடைபெற்று வருகிறது.